# இரண்டாம் இடைத்தேர்வு( மாதிரி)

பத்தாம் வகுப்பு-தமிழ். மதிப்பெண்கள்:100

**பகுதி-1** (மதிப்பெண்கள்:15)

**சரியான விடையைத் தேர்ந்தெடுத்து எழுதுக** 15X1=15

**1)வ. உ. சி தொடங்கிய கப்பல் நிறுவனம்.........**

*அ)சுதேசி ஆ)வ.உ.சி இ)இந்தியா ஈ)சுதேசமித்திரன்*

**2)வடக்கெல்லைத் தமிழர்களைஒன்றிணைத்து தமிழுணர்வுகொள்ளச் செய்தவர்...**

*அ)நேசமணி ஆ)செங்கல்வராயர் இ)மங்கலங்கிழார் ஈ)வ.உ.சி*

**3).......காலந்தொட்டு மெய்க்கீர்த்திகள் கல்லில் வடிக்கப்பட்டுள்ளன.**

*அ)முதலாம் இராசராசன் ஆ)இராசேந்திரன் இ)குலோத்துங்கன் ஈ)பராந்தகன்*

**4) சிலப்பதிகாரத்தில் வரும் தமிழ்நடை......**

*அ)அடுக்கு மொழிநடை ஆ)கொடுந்தமிழ் நடை இ)உரைப்பாட்டு மடை ஈ)கவிநடை*

**5) இரு நாட்டு அரசர்களும் தும்பைப் பூவைச் சூடி போடுவதற்குக் காரணம்....**

*அ)நாட்டைக் கைப்பற்றல் ஆ)ஆநிரை கவர்தல் இ)வலிமை நிலைநாட்டல் ஈ)வெற்றி*

**6) மனிதன் எல்லாவற்றோடும் தன்னை இணைத்துக் கொள்வதன் விளைவு.......**

*அ)செல்வம் ஆ)வெற்றி இ)உறவு ஈ)மகிழ்ச்சி*

**7) மேன்மை தரும் அறம் என்பது**

*அ) கைம்மாறு கருதாமல் அறம் செய்வது ஆ) மறுமை பயன் கருதி அறம் செய்வது*

*இ) புகழ் கருதி அறம் செய்வது ஈ)பதில் உதவி பெறுவதற்காக அறம் செய்வது*

**8)காலக்கழுதை என்பதன் இலக்கணக்குறிப்பு....**

*அ)உவமைத்தொகை ஆ)உருவகம் இ)காலப்பெயர் ஈ)பண்புத்தொகை*

**9)புகழுடைத் தெய்வம் என்று கண்ணதாசன் யாரைக் குறிப்பிடுகிறார்?**

*அ)ஆள்வோர் ஆ)மக்கள் இ)கவிஞர் ஈ)முன்னோர்*

**10)பலகற்றும் என்ற சீர் பெறும் வாய்பாடு**

*அ)புளிமா ஆ)கூவிளம் இ)கூவிளங்காய் ஈ)புளிமாங்காய்*

**11)ஏகாரத்தில் முடியும் பாவகை.....**

*அ)அகவற்பா ஆ)வெண்பா இ)வஞ்சிப்பா ஈ)கலிப்பா*

**பாடலைப் படித்து வினாக்களுக்கு விடையளி**

**பகர்வனர் திரிதரு நகரவீதியும்;**
**பட்டினும் மயிரினும் பருத்தி நூலினும்**
**கட்டு நுண்வினைக் காருகர் இருக்கையும்;**
**தூசும் துகிரும் ஆரமும் அகிலும்**

**12)இவ்வடிகள் இடம்பெற்ற நூல் யாது?**

**13) பாடலில் அமைந்த மோனையை எடுத்தெழுதுக.**

**14) இப்பாடலில் சொல்லப்பட்ட நறுமண பொருட்கள் யாவை?**

**15)காருகர்-பொருள் தருக.**

**பகுதி-2**

**எவையேனும் நான்கு வினாக்களுக்கு மட்டும் குறுகிய விடையளிக்க:** 4X2=8

**16)ம.பொ.சி.வகித்த பதவிகள் சிலவற்றைக் குறிப்பிடுக.**

**17)இரட்டைக்காப்பியங்கள்-பெயர்க்காரணம் கூறுக.**

**18) மெய்க்கீர்த்தி ஏன் பாடப்பட்டது?**

19) கண்ணதாசனின் பிறப்பு,பெற்றோர் பற்றிக் குறிப்பிடுக.
20)உண்மையான செல்வம் என்பதைப்பற்றி நல்வேட்டனார் குறிப்பிடுவது யாது?
21)செயற்கை எனத்தொடங்கும் குறளை அடிமாறாமல் எழுதுக.

எவையேனும் ஐந்தனுக்கு மட்டும் குறுகிய விடையளி: 5X2=10

22)பொருத்தமான இடங்களில் நிறுத்தற்குறியிடுக:
பழங்காலத்திலேயே பாண்டியன் ஆண்ட பெருமையைக்கூறி சோழன் நாட்டை ஆண்டசிறப்பைச் சொல்லி சேரன் ஆண்ட மாண்பினைக்காட்டி நம் அருமை தமிழ்நாடு ஆங்கிலேயருக்கு அடிமைப்பட்டு இருந்த சிறுமையையும் நினைவூட்டி விடுதலைப் போரில் ஈடுபட வருமாறு தமிழர்க்கு அழைப்பு விடுத்திருந்தேன் - ம.பொ.சி
23)நொச்சி, உழிஞைத் திணைகளை விளக்குக.
24)கொள்வோர் கொள்க: குரைப்போர் குரைக்க!
உள்வாய் வார்த்தை உடம்பு தொடாது
அ)அடி எதுகைகளை எடுத்தெழுதுக.
ஆ)இலக்கணக்குறிப்பு தருக- கொள்க,குரைக்க.
25)குறள் வெண்பாவை எடுத்துக்காட்டுடன் விளக்குக.
26)ஊர்ப்பெயர்களின் மரூஉவை எழுதுக: புதுக்கோட்டை, திருநெல்வேலி
27)பொருளறிந்து தொடரில் அமைக்க: அள்ளி இறைத்தல்,ஆறப்போடுதல்
28)பகுபத உறுப்பிலக்கணம் தருக: பெருக்கி

பகுதி-3(மதிப்பெண்கள் 18)

எவையேனும் இரண்டு வினாக்களுக்கு மட்டும் சுருக்கமான விடையளிக்க: 2X3=6

29)சிலப்பதிகார மாநாடு நடத்தியதன் காரணங்களாக ம.பொ.சி கூறுவன யாவை?
30) சங்க இலக்கியங்கள் காட்டும் மரங்கள் இன்றைக்கும் தேவை என்பதற்குச் சில எடுத்துக்காட்டுகள் தருக.
31)உரைப்பத்தியைப் படித்து வினாக்களுக்கு விடை தருக:
அறம் கூறும் மன்றங்கள் அரசனின் அறநெறி ஆட்சிக்குத் துணை புரிந்தன.அறம் கூறு அவையம்பற்றி அறம்அறக்கண்டநெறிமான்அவையம் என்கிறது புறநானூறு. உறையூரில் இருந்த அற அவையம் தனிச்சிறப்புப் பெற்றது என்று இலக்கியங்கள் குறிப்பிடுகின்றன.மதுரையில் இருந்த அவையம் பற்றி மதுரைக்காஞ்சி குறிப்பிடுகிறது.
அ)தனிச்சிறப்பு பெற்ற அற அவையம் எங்கு அமைந்திருந்தது?
ஆ)மதுரையிலிருந்த அவையும் பற்றி எந்த நூல் குறிப்பிடுகிறது?
இ)இந்த உரைப்பத்திக்குப் பொருத்தமான தலைப்பொன்று தருக.

எவையேனும் இரண்டனுக்கு மட்டும் சுருக்கமான விடையளிக்க: 2X3=6

32)உள்வாய் வார்த்தை உடம்பு தொடாது- இடஞ்சுட்டி பொருள் விளக்கம் தருக.
33)மருவூர்ப் பாக்கத்தின் தெருக்களில் விற்கப்பட்ட பொருட்களைப் பட்டியலிடுக.
34) தூசும் துகிரும் எனத்தொடங்கும் சிலப்பதிகாரப் பாடலை எழுதுக. (கட்டாய வினா)

எவையேனும் இரண்டு வினாக்களுக்கு மட்டும் சுருக்கமான விடையளி: 2X3=6

35)ஆசிரியப்பாவின் பொது இலக்கணம் எழுதுக.
36)வஞ்சப்புகழ்ச்சி அணியைச் சான்றுடன் விளக்குக.
37) அருளொடும் அன்பொடும் வாராப் பொருளாக்கம்
புல்லார் புரள விடல்.- அலகிட்டு வாய்ப்பாடு எழுதுக.

பகுதி-4(மதிப்பெண்கள் 25)

**அனைத்து வினாக்களுக்கும் விடையளிக்க:** **5X5=25**

38) அ)சிலப்பதிகார மருவூர்ப்பாக்கம் வணிக வீதிகளை, இன்றைய வணிக வளாகங்களோடும் அங்காடிகளோடும் ஒப்பிட்டு எழுதுக.

(அல்லது)

ஆ)காலக்கணிதம் எனும் கவிதையில் கண்ணதாசன் குறிப்பிடும் கருத்துக்களைத் தொகுத்து எழுதுக.

**39) அ) உங்கள் தெருவில் பழுதடைந்துள்ள மின்விளக்குகளைச் சரி செய்து தர வேண்டிமின்வாரிய அலுவலருக்குக் கடிதம் எழுதுக.**

(அல்லது)

**ஆ)நாளிதழ் ஒன்றில் பொங்கல் மலரில் உழவுத் தொழிலுக்கு வந்தனை செய்வோம் என்ற உங்கள் கட்டுரையை வெளியிட வேண்டி அந்நாளிதழ் ஆசிரியருக்குக் கடிதம் எழுதுக.**

40) படம் உணர்த்தும் கருத்தை நயமுற ஐந்து தொடர்களில் எழுதுக.



**41)நயம் பாராட்டுக;**

**19)தேனினும் இனியநற் செந்தமிழ் மொழியே!**

**தென்னாடு விளங்குறத் திகழுந்தென் மொழியே!**

**ஊனினும் ஒளிர்வுறும் ஒண்டமிழ் மொழியே!**

**உணர்வினுக் குணர்வதாய் ஒளிர்தமிழ் மொழியே!**

**வானினும் ஓங்கிய வண்டமிழ் மொழியே!**

**மாந்தருக் கிருகணா வயங்குநன் மொழியே!**

**தானனி சிறப்புறுந் தனித்தமிழ் மொழியே!**

**தழைத்தினி தோங்குவாய் தண்டமிழ் மொழியே!**

www.Padasalai.Org

42)மொழிபெயர்க்க:

**அ) Among the five geographical divisions of the Tamil country In Sangam literature, the Marutham region was the Fit for cultivation, has it had the most fertile lands. The property of a farmer Depended on getting the necessary sunlight , seasonal rains and the fertility of the soil. Among these elements of nature, Sunlight was considered indispensable by the ancient Tamils.**

(அல்லது)

**ஆ)பின்வரும் தொடர்களைக் கொண்டு பொருத்தமான தொடர் அமைக்க;**

**வரப்போகிறேன், இல்லாமல்இருக்கிறது, கொஞ்சம்அதிகம், முன்னுக்குப்பின், மறக்க நினைக்கிறேன்.**

பகுதி-5(**மதிப்பெண்கள்**)

**அனைத்து வினாக்களுக்கும் விரிவான விடையளிக்க:** **3X8=24**

**43) அ)பாடப்பகுதியில் இடம்பெற்றுள்ள மெய்க்கீர்த்தி பாடலிலுள்ள நயங்களை விளக்குக.**

(அல்லது)

**ஆ)நதிவெள்ளம் காய்ந்து விட்டால்**

**நதிசெய்த குற்றமில்லை**

**விதிசெய்த குற்றமின்றி**

**வேறு யாரம்மா! -கண்ணதாசன் கவிதையை, கம்பனின் வரிகளோடு ஒப்பிட்டு எழுதுக.**

**44) அ) இராமானுசர் நாடகத்தைச் சிறுகதை வடிவில் மாற்றி எழுதுக.**

(அல்லது)

**ஆ)நீவிர் அறிந்த சாதனைப் பெண்கள் குறித்து கட்டுரை எழுதுக.**

45) அ)நாட்டு விழாக்கள் - விடுதலைப் போராட்ட வரலாறு - நாட்டு முன்னேற்றத்தில் மாணவர் பங்கு -

**குறிப்புகளைக் கொண்டு மாணவப் பருவமும் நாட்டுப்பற்றும் என்ற தலைப்பில் கட்டுரை எழுதுக.**

(அல்லது)

ஆ)பள்ளித்திடலில் கிடைத்த பணப்பையை உரியவரிடம் ஒப்படைத்ததையும், அதற்கு பாராட்டு பெற்றதையும் பற்றி உமது உறவினர் ஒருவருக்குக் கடிதம் எழுதுக.

செ.பாலமுருகன்

வெ.க.வாசு, அரசினர் உயர்நிலைப்பள்ளி, தணிகை போளூர், வேலூர் மாவட்டம்.

Padasalai